மகளிர் வங்கிக் கணக்குகளில் ரூ.5 ஆயிரம் வரவு ! கலைஞர் "மகளிர் உரிமைத்தொகை ரூ. 2 ஆயிரமாக உயர்த்தப்படும்" எனும் முதல்வரின் அறிவிப்பு !

# 'திராவிட மாடல்' அரசை - முதலமைச்சரை தாய்க் கழகமான திராவிடர் கழகம் பாராட்டி வாழ்த்துகிறது !

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, பிப்.15-**

**"கலைஞர் மகளிர் உரிமைத் தொகை"யின் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகை ரூ.3000-மும், கோடை சிறப்புத் தொகுப்பாக ரூ.2000மும் சேர்த்து மொத்தம் ரூ.5000 மகளிர் வங்கிக் கணக்குகளில் தமிழ்நாடு அரசால் நேற்று (13.2.2026) செலுத்தப்பட்டுள்ளது. மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி அமைந்ததும் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000-மாக உயர்த்தப்படும் என்ற முதலமைச்சர் அறிவிப்பை தாய்க்கழகமான திராவிடர் கழகம் வரவேற்று, 'திராவிட மாடல்' அரசுக்கும், அதன் முதலமைச்சருக்கும் மீண்டும் மீண்டும் நமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. இதைக் குற்றம் சொல்பவர்கள், குறை சொல்பவர்கள் தாங்கள் ஏமாந்துவிட்டோமே என்ற ஆற்றாமையால் புலம்புபவர்களே என்று திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசும், அதனைத் தலைமையேற்று நடத்துகிற ஒப்பற்ற முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும் எவ்வளவு விழிப்போடு ஒவ்வொரு செயலையும் கண்காணித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நமக்கு வியப்பே ஏற்படுகிறது.

நேற்று (13.2.2026) அதிகாலையிலேயே தமிழ்நாட்டு மகளிருக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி! தங்களது வங்கிக் கணக்கில் ரூ.5000 வரவு வைக்கப்பட்டுள்ளது எப்படி? ஏன்? என்று யோசிக்கிறபோது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதனைத் தொலைக்காட்சி வாயிலாக மகிழ்வுடன் தெளிவுபடுத்தினார்.



### மகளிர் வங்கிக் கணக்குகளில் ரூ.5000/-

தி.மு.க. கடந்த 2021 தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதியின்படி மாதந்தோறும் மகளிருக்கு வழங்கப்பட்டு வரும் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை"யின் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகையும், கோடை சிறப்புத் தொகுப்பாக ரூ.2000மும் சேர்த்து மொத்தம் ரூ.5000 மகளிர் வங்கிக் கணக்குகளில் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

மாதந்தோறும் தவறாமல் 15 ஆம் தேதி அன்று வழங்கப்படும் இந்தத் தொகை, 15 ஆம் தேதி ஞாயிறு வங்கி விடுமுறை என்பதால், இரு நாட்களுக்கு முன்பே செலுத்தப்பட்டுவிட்டது. ஆனால், அடுத்தடுத்த மாதங்களுக்கும் சேர்த்து ஏன் வழங்கப்பட்டது என்பது தான் 'திராவிட மாடல்' அரசு விழிப்போடு செயல்படுகிறது என்று நாம் சொன்னதற்கான காரணம்.

### உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல்!

நடைபெறவிருக்கும் தேர்தலைக் காரணம் காட்டி, உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பா.ஜ.க. தலைவர் அஸ்வின் உபாத்யாய் என்பவர் இலவச லேப்டாப், மகளிர் உரிமைத் தொகை போன்றவற்றுக்கெதிராக வழக்கு ஒன்றைத் தொடுத்திருப்பதாகவும், உச்சநீதிமன்றம் அதனை விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகக் கூறியிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

அது மட்டுமல்லாமல், தேர்தல் தேதியை அறிவித்து, அதன் மூலம் இத்தகைய திட்டங்களைத் தடுக்கலாம் என்றும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. அவர்களே தடுத்துவிட்டு, "பார்த்தீர்களா.. முன்பு கொடுத்தார்கள். இப்போது கொடுக்கவில்லை" என்று பிரச்சாரம் செய்யலாம் என்று கருதிக் கொண்டிருந்தார்கள் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும்!

இவற்றையெல்லாம் அறிந்துதான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சிகளின் கையில் இருக்கும் ஆயுதத்தைப் பறித்தது போல, சிறப்பான இந்தச் செயல்பாடு மூலம் மகளிருக்கு வழங்குவோம் என்று சொன்ன உரிமையை எவரும் தடை செய்ய முடியாத வகையில், கைகளில் கொண்டு சேர்த்து, சொன்னதை மட்டு மல்ல, சொல்லாததையும் சேர்த்துச் செய்திருக்கிறார்கள். இது ஓர் அரசு எப்படி வருமுன் கணித்து நடக்க வேண்டும் என்பதற்கான பாடமாகும்.

இதைக் குற்றம் சொல்பவர்கள், குறை சொல்பவர்கள் தாங்கள் ஏமாந்துவிட்டோமே என்ற ஆற்றாமையில் புலம்புபவர்களே! பாஜக கூட்டணியில் உள்ள பீகார் நிதிஷ் குமார் அரசு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால் ரூபாய் 10 ஆயிரத்தை மகளிருக்கு வழங்கினார்களே, அப்போதெல்லாம் அதை 'மாஸ்டர் ஸ்ட்ரோக்' என்றவர்கள் இப்போது புலம்புவது ஏன்? இத்தனைக்கும் பீகாரில் இப்படி ஒரு திட்டம் கிடையாது. தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக மாதம் தோறும் தேதி தவறாமல் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மகளிரை சென்றடைந்து கொண்டிருக்கிறது. அதை முறைப்படி முன்கூட்டியே தந்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

### தமிழ்நாட்டு மகளிர் அடையாளம் கண்டு கொள்வீர்!

மகளிர் உரிமை என்று சொன்னது வெற்று வார்த்தை அல்ல! அந்த உரிமையை எப்படியேனும் தருவது தான் ஓர் அரசின் கடமை என்பதை முதலமைச்சர் அவர்களின் இந்த செயல்பாடு உறுதிப்படுத்துகிறது. இந்தத் திட்டத்தை தடை செய்ய நினைப்பவர்களையும், இடையூறு செய்பவர்களையும் தமிழ்நாட்டு மகளிர் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

### திராவிடர் கழகம் பெருமகிழ்வுடன் வரவேற்கிறது!

அதுமட்டுமல்லாமல் 2026 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று தி.மு.க. ஆட்சி அமைத்ததும், மகளிர் உரிமைத் தொகையை 2000 ரூபாயாக உயர்த்துவோம் என்ற அறிவிப்பும், தேனில் தோய்ந்த பலாச்சுளை போன்ற இனிப்பான அறிவிப்பாகும். மகளிருக்கு உரிமை வழங்கும் இந்த அறிவிப்பை திராவிடர் கழகம் பெருமகிழ்வுடன் வரவேற்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது எப்போதுமே சொன்னதைச் செய்து முடிக்கும் இயக்கம் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்; இப்போது அகில இந்தியாவும் அதனை உணர்ந்திருக்கிறது!

எத்தனைத் தடைகள் வந்தாலும் இடையூறுகள் என்றாலும் அவற்றையெல்லாம் தாண்டி பீடு நடை போடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'திராவிட மாடல்' அரசுக்கும், அதன் முதலமைச்சருக்கும் மீண்டும் மீண்டும் நமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# கேள்விக் கென்ன பதில் ?

**கேள்வி :**

**தமிழ்நாடு மகளிர் சற்றும் எதிர்பாராத வகையில், ஒரே தவணையில் 5,000 ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்ததைப் பலரும் பலபடப் பாராட்டுகிறார்களே ?**

**பதில்:**

வெகு மக்களுக்கு நன்மையும், மகிழ்ச்சியும் தரும் அரசு அறிவிப்புகளை வரவேற்றுப் பாராட்டுவதுதானே, நேர்மை நடுநிலை தவறாமை !

**பாராட்டுகள்:**

"தமிழ்நாட்டில் உள்ள பெண்களுக்கு நேற்று முன்தினம் காலை **'குட் மார்னிங்'** என்பது உண்மையிலேயே **'சூப்பர் மார்னிங்'** ஆக அமைந்தது."

"திடீரென்று உரிமைத் தொகை, பெண் பயனாளிகளின் வங்கிக் கணக்கில், தமிழக அரசு சார்பில் ரூபாய் 5 ஆயிரம் வரவு வைக்கப்பட்டது இன்ப அதிர்ச்சியாக இருந்தது."

**"பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வரவு, அதிகாலையில் முதல்வர் அதிரடி."**

"முதல்வர் மு.க.ஸ்டாலினின் அதிரடி அறிவிப்பைப் பார்த்து, தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் அதிர்ந்து போயினர். வாழ்த்து தெரிவிக்க வார்த்தைகள் தெரியாமல் திகைத்துப் போயினர்."

**"மகிழ்ச்சிக் கடலில் மகளிர்."**

"பொங்கல் பரிசுத் தொகை 3 ஆயிரம் ரூபாய் கிடைத்த மகிழ்ச்சியில் தமிழக மக்கள் உற்சாகமாகப் பொங்கல் கொண்டாடி மகிழ்ந்தனர். அதிலிருந்து மீள்வதற்குள் இன்ப அதிர்ச்சியாக நேற்று முன்தினம் காலை மகளிர் உரிமைத் தொகை 5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது."

"மாதந்தோறும் ரூ.1000 பெற்றுவரும் பெண்கள் ஒரே தவணையில் ரூ.5000 வரவு வைக்கப்பட்டதால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்."

**"T.N. CM's bonanza"**

"Friday in TN as 1.31 Cr women get 5 K rupees each"

"The DMK Govt/: on Friday sprang a surprise by crediting 5000 rupees into the bank accounts of 1.31 Cr beneficiaries of Kalaignar Magalir Urimai Thittam."

**கேள்விக்கு இதுவே சுருக்கமான பதில் !**

---

## கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூ.5000 ! முதல்வரின் அறிவிப்பு

# சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல் இருக்கிறது!

## கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பாராட்டு!

**சென்னை, பிப்.15-**

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை முன்பணமாக ரூ.5000 என்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நடவடிக்கை பாராட்டுக்குரியது என்று அரசியல் கட்சி தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மக்கள் நல திட்டத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசுக்கும் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து தலைவர்கள் வெளியிட்டுள்ள கருத்து வருமாறு:-



**வைகோ (மதிமுக பொதுச்செயலாளர்):** சொன்னதை செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின், சொல்லாததையும் செய்து காட்டுவார் என்பதற்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டமே சான்றாக இருக்கிறது. திமுக ஆட்சியில் மகளிர் நலன் காக்கும் ஏராளமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, தாய்க்குலத்தின் பேராதரவு திராவிட மாடல் ஆட்சிக்குப் பெருகிக்கொண்டே போகிறது. இந்நிலையில் சர்க்கரை பந்தலில் தேன்மாரி பொழிந்ததைப் போல் முதல்வர் வெளியிட்டிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பற்றிய அறிவிப்பை மதிமுக வரவேற்று பாராட்டுகிறது.



**பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர்):** தமிழகமெங்கும் ரூ.5000 என்பதே பேச்சாக இருக்கிறது. மகளிர் உரிமைத்தொகை பெறக்கூடிய அனைத்து குடும்பங்களிலும் மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் காட்சியை காண்கிறேன்.



**மு.வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர்):** தேர்தல் நடத்தை விதிகளால் மகளிர் உதவித் தொகை செலுத்தும் நடவடிக்கை பாதிக்கப்பட்டு, அதனால் குடும்பத் தலைவிகள் சிரமங்களை சந்திக்கக் கூடாது என்ற பொறுப்புணர்வோடும், கோடைக் காலத்தில் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை நாட்கள் என்பதாலும், குடும்பச் செலவுகள் கூடும் என்பதையும் கருத்தில் கொண்டு சிறப்பு நிதியாக ரூ.2000ம் சேர்த்து, குடும்பங்களுக்கு தலா ரூ.5000 வீதம் வங்கியில் முன்கூட்டியே செலுத்தியது அனைவரது உள்ளங்களிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. முதல்வரின் சமூக நீதி பார்வையும், பாலின சமத்துவம் நோக்கிய நடவடிக்கைகளையும் வரவேற்கிறோம்.



**எம்.எச்.ஜவாஹிருல்லா (ம.ம.க. தலைவர்):** மாதாந்திர மகளிர் உரிமைத் தொகை' பெறும் 1.31 கோடி பெண்களுக்கு முன்பணமாக ரூ.5000 அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் நடவடிக்கை, பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யும் முக்கியமான மற்றும் வரவேற்கத்தக்க முடிவாகும்.



**நெல்லை முபாரக் (எஸ்டிபிஐ கட்சி தலைவர்):** தமிழகத்தில் மக்கள் நலத்திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட முயன்றவர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து, ஏழை எளிய பெண்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் இந்த அதிரடி முடிவை மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலினின் நடவடிக்கை மிகவும் துணிச்சலானது, பாராட்டத்தக்கது.



**பொன்குமார் (தமிழ்நாடு விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி தலைவர்):** முதல்வர் மு.க. ஸ்டாலின் 1.31 கோடி மகளிருக்கு தலா ரூ. 5000 வீதம் ரூ.6550 கோடியை மகளிர் வங்கிக் கணக்கிலும் செலுத்தி திராவிட மாடல் ஆட்சி என்பது மகளிருக்கான ஆட்சி என்பதை நிரூபித்துள்ளார்.

---

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.5000– அரசியல் வரலாற்றில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முக்கிய திருப்புமுனை ஏற்படுத்தி உள்ளார்!

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

**சென்னை, பிப். 14-**

**தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-**

2021 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் தி.மு.க. கொடுத்த வாக்குறுதிகளில் 90 சதவிகிதம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 17 லட்சத்து 53 ஆயிரம் மாணவ- மாணவியர் பயனடைகிற காலை உணவுத் திட்டம் போன்ற அறிவிக்கப்படாத வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் முத்திரை திட்டங்களான மகளிர் விடியல் பயணம், தோழி மகளிர் விடுதி, புதுமைப் பெண்கள் திட்டத்தின் மூலம் 4 லட்சத்து 83 ஆயிரம் பெண்களுக்கு மாதம் ரூபாய் 1000 உதவித் தொகை, தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் 3 லட்சத்து 80 ஆயிரத்து 467 கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 1000, திறன் பயிற்சியை வளர்க்க நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி, இதுவரை 2 கோடிக்கும் மேல் பயனடைந்த மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், கலைஞர் கைவினைத் திட்டம், கலைஞர் கனவு இல்லம் என பல்வேறு திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு பயனாளிகளுக்கு போய் சேர்ந்திருக்கிறது. கடுமையான நிதி நெருக்கடியில் ஆட்சியமைத்த தி.மு.க. அரசு இத்தகைய சாதனைகளை படைத்து வருகிறது.



பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16 சதவிகித பங்களிப்புடன் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதாக இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளி விவர கையேடு கூறுகிறது. அதன்படி, ரூபாய் 31.19 லட்சம் கோடி வளர்ச்சி ஏற்பட்டு தனிநபர் வருமானம் ரூபாய் 3.61 லட்சமாக உயர்ந்திருக்கிறது. தேசிய சராசரி வருமானம் ரூபாய் 1.96 லட்சமாகத் தான் இருக்கிறது. மேலும், தமிழக மக்களின் தனிநபர் வருமானம் 1.6 மடங்காக அதிகரித்திருக்கிறது.

2021-25 ஆம் ஆண்டுவரை அன்னிய முதலீடு ஈர்ப்பு ரூபாய் 11 லட்சம் கோடியாக உயர்ந்து லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். முதலீட்டாளர்களின் முகவரியாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்து இரண்டாவது பெரிய பொருளாதார வளமிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை ஒதுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணித்து வருகிற நிலையில், இத்தகைய சாதனைகளை படைத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சரை, தமிழ்நாட்டு மக்களே இன்று பாராட்டி மகிழ்கிறார்கள். தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதார வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையை தமிழ்நாடு முதலமைச்சர் ஏற்படுத்திருக்கிறார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுகிற வகையில் ஆட்சி அமைந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை மாதந்தோறும் ரூபாய் 1000 வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூபாய் 3000, கோடை கால சிறப்பு தொகுப்பாக ரூபாய் 2000 என மொத்தம் ரூபாய் 5000 கலைஞர் மகளிர் உரிமை திட்ட பயனாளிகளான 1 கோடியே 31 லட்சம் மகளிருக்கு இன்று காலை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. பயனடைந்த மகளிருக்கு இன்ப அதிர்ச்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

அ.தி.மு.க.வின் தூண்டுதலின் பேரில், இத்திட்டத்தை முடக்குவதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டது. ஆனால், அந்த தடைகளையெல்லாம் தகர்த்து 1 கோடியே 31 லட்சம் மகளிர் தங்களது மாதாந்திர செலவை மேற்கொள்வதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், மகளிர் சுயசார்புடையவர்களாக குறைந்தபட்ச வருமானத்துடன் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக திட்டமிட்டு செயலாற்றிய முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக மனதார பாராட்டுகிறேன். தமிழ்நாட்டின் மக்கள் நலன் சார்ந்த அரசு என்பதை முதலமைச்சர் பல்வேறு திட்டங்களின் மூலமாக நாள்தோறும் நிரூபித்து அனைவரது பாராட்டுதல்களையும் பெற்று வருகிறார்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.